**1901**

Register Number | | | | | |

# தமிழ் — முதல் தாள்

## ( செய்யுள், உரைநடை )

நேரம் : $2\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

***குறிப்பு :*** i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

ii) வினா எண் III க்குச் செய்யுள் வடிவில் விடை எழுதுதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **ஏழனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை எழுதுக. 7 × 2 = 14

1. ஏன் அறநெறி ஓங்குதல் வேண்டும் ?
2. உள்ளியதெல்லாம் பெறுவது எப்போது ?
3. சிலம்பு உணர்த்தும் மூன்று நீதிகளைக் குறிப்பிடுக.
4. அனுமன் கண்ட சீதையின் நிலை யாது ?
5. யூதர்கள் சிலுவைமிசை எழுதியது யாது ?
6. பூவைநிலை - துறை விளக்கம் தருக.
7. 'தொன்னையுள்ளம்' - எது ?
8. புத்தர் எதை மொழிந்தார் ? எதற்கு உழந்தார் ?
9. பாணன் எங்குப்பாடினான் ? எவ்வளவு நேரம் பாடினான் ?

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக. 5 × 4 = 20

10. தமிழின் சிறப்புகளை விளக்குக.
11. 'விரிமழைக் குலங்கிழித் தொளிரும் மின்னென'.
    – உவமையை விளக்கிப் பொருளொடு பொருத்துக.
12. விண்மீன் கூட்டத்திற்குக் காட்டப்பட்டுள்ள உவமைகளைத் தொகுத்து எழுதுக.
13. ஊர் ஆண்மைக்குரிய செல்வங்கள் யாவை ?
14. கடலின் மேன்மைத் தன்மைகள் யாவை ?
15. அருக தேவனைச் சமண முனிவர் எங்ஙனம் புகழ்ந்துள்ளார் ?
16. அறிவியல் அறிஞர்கள் மந்திரம் போல் செய்து முடித்த செயல்கள் யாவை ?

[ Turn over

III. பின்வருவனவற்றை அடிபிறழாமல் எழுதுக.

17. 'வீடின தன்றறன்.......' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக. 4

18. 'உடையர் ......' என்று தொடங்கும் குறட்பாவை எழுதுக. 2

19. 'நிலம்' என முடியும் குறட்பாவை எழுதுக. 2

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் பதினைந்து வரிகட்கு மிகாமல் விடை எழுதுக : $1 \times 8 = 8$

20. ஊக்கமே சிறந்ததென்பதனையும், அதனை உடையாரது உயர்ச்சியையும் விளக்கி எழுதுக.

21. கொடியவர்களின் தீச்செயலையும், இயேசுநாதரின் அருள் திறனையும் தொகுத்தெழுதுக.

22. பாரதியார் கூறும் பாரதப் பூமியின் பெருமைகளைத் தொகுத்து எழுதுக.

V. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

23. பொருத்துக : $4 \times 1 = 4$

| பாடல் பொருள் | | பாடல் ஆசிரியர் |
|---|---|---|
| அ) ஒளிர்தரு நாடு | — | தமிழ் ஒளி |
| ஆ) உலக ஒற்றுமை | — | வாணிதாசன் |
| இ) விண்மீன் கூட்டம் | — | பாரதிதாசன் |
| ஈ) சுற்றுப்புறச் சூழல் | — | பூங்கோவன் |
| | — | பாரதியார். |

சரியான விடையைத் தேர்ந்தெடுக்க : $6 \times 1 = 6$

24. 'நெஞ்சை அள்ளுஞ் சிலப்பதிகாரம்' என்று பாடியவர் .................. .

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) கவிமணி.

25. கம்பராமாயணத்திலுள்ள காண்டங்கள் .................. .

அ) ஐந்து ஆ) ஏழு இ) ஆறு.

26. புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்

அ) ஜி. யு. போப் ஆ) வீரமாமுனிவர் இ) ஹீராஸ் பாதிரியார்.

27. திரிகூடமலை என்பது .................. .

அ) வேங்கட மலை ஆ) மருத மலை இ) திருக்குற்றால மலை.

28. மையிருட்டுக் கைந் நீட்டும் ..................

அ) மேற்கு வானில் ஆ) தொடுவானில் இ) கீழ்த்திசையில்.

29. நந்திக்கலம்பகம் இயற்றப்பெற்ற காலம்

அ) கி. பி. 2 ஆம் நூற்றாண்டு

ஆ) கி. பி. 9 ஆம் நூற்றாண்டு

இ) கி. பி. 17 ஆம் நூற்றாண்டு.

VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை எழுதுக. 5 × 2 = 10

30. கட்டாயப் படிப்பு பற்றித் திரு. வி. க. யாது கூறுகிறார் ?

31. அரங்கேற்றம் பற்றிச் சிறுகுறிப்பு வரைக.

32. அறிவுரை கூறுதல் பற்றி மு. வ. அவர்களின் கருத்து யாது ?

33. இந்தியாவின் தேவைகளென அப்துல் கலாம் குறிப்பிட்டுள்ளவை யாவை ?

34. 'இமயம்' என்பது நெ. து. சு. விற்கு எதனை நினைவுக்குக் கொண்டு வருகிறது ?

35. 'கலை' - இருபொருள் கூறி, விளக்குக.

36. 'பொருள்' - என்பதன் இருபொருள் நயம் தருக.

VII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **நான்கனுக்கு** ஒவ்வொன்றிற்கும் *ஆறு* வரிகளில் விடை எழுதுக. 4 × 4 = 16

37. உமறுப்புலவரின் நன்றி மறவாப் பண்பினை விளக்குக.

38. நீர்ப்பொருளின் சுருங்கா இயல்பு - விளக்குக.

39. பெரியாரின் தொண்டு எங்கே தொடங்கியது ? என்ன செய்தது ?

40. இல்வாழ்க்கை எப்படி வளர வேண்டும் என மு. வ. வாழ்த்துகிறார் ?

41. ஒரு நாட்டின் உள்வளத் திறமைகள் யாவை ?

42. கல்வி அறிவின் சிறப்புகள் யாவை ?

VIII. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் பதினைந்து வரிகட்கு மிகாமல் விடை எழுதுக. 1 × 8 = 8

43. பெரியாரின் மதுவிலக்குத் தொண்டு பற்றித் தொகுத்து எழுதுக.

44. நட்பையும், கணவன் மனைவி வாழ்க்கையையும் மு. வ. எவ்வாறு பொருத்திக் காட்டுகிறார் ?

45. கபிலர் எவ்வாறு கலிலியோவுக்கு முன்னோடி ஆகிறார் ?

[ Turn over

IX. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : $4 \times 1 = 4$

46. உமறுப்புலவரைப் போற்றிப் பாதுகாக்க முன்வந்த புரவலர்

அ) வாலை வாரிதி

ஆ) அபுல் காசீம் மரைக்காயர்

இ) உசேன் நயினார்.

47. காந்தியார் காட்டிய ............. போராட்டத்தைப் பெரியார் விழிப்பாகக் கடைப்பிடித்தார்.

அ) ஒத்துழையாமை

ஆ) உப்புக்காய்ச்சுதல்

இ) அந்நியப் பொருள் புறக்கணிப்பு.

48. ஆண்மான் என்னும் பொருள் தரும் சொல்

அ) கழை

ஆ) களை

இ) கலை.

49. நட்புக்குக் கரும்பை உவமையாகச் சொன்ன இலக்கியம்

அ) திரிகடுகம்

ஆ) பழமொழி

இ) நாலடியார்.

X. கீழ்க்காணும் சொற்களுள் எவையேனும் **இரண்டினை** மட்டும் வாக்கியத்தில் அமைத்து எழுதுக $2 \times 1 = 2$

50. அ) இன்றியமையாதது

ஆ) வரிசையறிந்து

இ) ஏற்றத்தாழ்வு.